விலை ரூபா 5/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் 51 | கார்த்திகை - 2000 | பக்கங்கள் 12 | ஒளி 46

## கூட்டுறவுப் பெரியார் அமரர் வி. வீரசிங்கம்

# வகுத்த தலைமைத்துவத்தை பின்பற்ற வேண்டும்

எந்த ஒரு மனிதனின் செயல் விளைவு நல்லதாக அமைகின்றதோ அவனே நல்ல மனிதன். அதாவது நல்ல மனிதர்களின் செயல்பாடு எப்போதும் நல்லதாகவே இருக்கும். இந்த உலகில் வாழ்ந்து மறைந்த பல கோடி மனிதர்களுள் மக்கள் மனதில் நிலைத்து நிற்பவர்கள் சிலரே. தனக்காக மட்டும் வாழாது சமூகம் வாழ வழிகாட்டி, சமூகத்திற்கு வாழ்ந்து காட்டி, சமூகத்தை வாழ வைத்த, சமூகத்தில் வாழ்ந்த பெரியோர்கள் பலரை நாம் பார்க்கின்றோம். இவர்கள் சொல்லும், செயலும் ஒன்றாகி, அகமும், புறமும் ஒருமித்து சமூக சேவையை ஆட்டம்பரமற்ற, அமைதியான, தன்னலம் கருதாத தெய்வீகப் பணியாக நினைத்து சேவை புரிந்தார்கள். தகுதி வாய்ந்த மனிதப் பிறவிகளில் சேவையை சமூகம் பெற்றது. அதனால் சமூக சேவை தகுதி பெற்றது.

இந்த வகையில் சிறந்த கூட்டுறவுப் பணியை ஆற்றியதன் மூலம் அமரர் வீரசிங்கம் கூட்டுறவால்



உயர்ந்தவரா? அல்லது கூட்டுறவு அமரர் வீரசிங்கத்தால் உயர்ந்ததா? என்ற வினா உருவாகியுள்ளது. அமரரின் பணியால் யாழ். மாவட்டக் கூட்டுறவுத் துறையில் பெருவெற்றி கண்டது என பலரும் போற்றியுள்ளனர். அமரர் வீரசிங்கம் அவர்களின் கூட்டுறவுப் பணி மட்டுமன்றி கல்விப் பணி, ஏனைய சமூகப் பணிகள் வெற்றி கண்டமைக்கு காரணம் உண்மை, நேர்மை, விடாமுயற்சி மனங்களை வெல்லும் பண்பு, சிறந்த தீர்மானம் எடுக்கும் திறன், உயர்ந்த கல்வி அறிவு, ஆழ்ந்த புலமை, சமூகப் பற்று, முன்னுதாரணமாக நடத்தல், தொலை நோக்கு, தீர்க்க தரிசனம் போன்ற சிறப்பியல்புகள் இயல்பாகவே அவரிடம் நிறைந்தமை.

வளர்ந்து வரும் உலகிற்கு ஏற்ப கல்வி, மொழி, தொழில்நுட்ப மாற்றங்கள் புகுத்தப்பட வேண்டும் என்ற

(12ம் பக்கம் பார்க்க)

### உள்ளே....


* உருளைக்கிழங்கு விளைச்சலை அதிகரிப்பதற்கான வழி முறைகள்
* வணிகக் கல்வி
* கூட்டுறவு இயக்கத்தின் பூரண வெற்றிக்கு
* நேர முகாமைத்துவம்
* கூட்டுறவு விசாரணைக்குழுவுக்கு
* பொது அறிவு


எல்லோர்க்கும் எல்லாமே என்றே ஞாலம் இலங்கிடவே - கூட்டுறவு ஏற்ற பாதை.
இல்லாமை இல்லாத வாழ்வு வேண்டின் ; ஏற்றிடுவோம் - வெற்றிப்பாதை!

★ கூட்டுறவே நாட்டுயர்வு ★

# உருளைக்கிழங்கு விளைச்சலை அதிகரிப்பதற்கான வழி முறைகள்

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கூடியளவு விளைச்சலை எபபடிப் பெற்றுக்கொள்ளலாம். என்பதற்கான வழிமுறைகள் இக் கட்டுரையில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பெரும்போக உருளைக்கிழங்குச் செய்கைக்காக 'நெதர்லாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'டிசிறி' இன விதைக்கிழங்கு தனியார் மூலம் கொண்டு வரப்பட்டு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது போக்குவரத்துச் சிரின்மையால் இங்கு உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கைக் கடந்த சில ஆண்டுகளில் இருந்த நிலைமை போன்று பிற மாவட்டங்களுக்குக் கொண்டு சென்று சந்தைப் படுத்த முடியாத நிலை ஏற்படலாம். யாழ். மாவட்ட விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்கள். பெற்ற அனுபவத்துடன் விவசாயத் திணைக்களம் வழங்கும் தொழில் நுட்ப அறிவையும் பயன்படுத்திக் கூடிய விளைவைப் பெற வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

1. உருளைக்கிழங்கு வெற்றிகரமாகச் செய்கை பண்ணுவதற்கு நிலம் குளிர்ச்சியாக இருத்தல் வேண்டும். அத்தோடு கிழங்கு பருமனடையும் போது இரவு காலம் குளிராகவும், பகல் வெப்பமாகவும் இருத்தல் அவசியமானதாகும் இப்படியான சுவாத்தியம் யாழ் மாவட்டத்தில் வழமையாக கார்த்திகை மாத நடுப்பகுதி முதல் மார்கழி மாத இறுதி வரை இருப்பதினால் இக்கால இடையில் நடுகையைப் பரவலாக மேற்

## மண்வளம்

கொள்ளுவதன் மூலமும் பயிரை நன்கு முதிர்ச்சியடையவிட்டு (கிழங்கு நட்டு 3 மாதத்திற்குப்பின்) அறுவடை செய்து அறுவடையின் ஒரு பகுதியை உரிய முறையில் - 3 மாதங்கள் வரை சேமித்து வைத்து விற்பனை செய்வதன் மூலமும் சித்திரை, வைகாசி மாதம் வரை இம் மாவட்டத் தேவையைப் பூர்த்திசெய்யலாம். இந்த முறைகளைப் பின்பற்றும் போது சந்தை விலை கூடுதலாக வீழ்ச்சிபடையமாட்டாது. இதனால் உற்பத்தியாளர்கள் கூடிய நிகர இலாபத்தைப் பெறமுடியும்.

2. இப்பொழுது வழங்கப்படுகின்ற விதை கிழங்குகளால் முளை அரும்பவில்லை எனவே முளை அரும்பச் செய்ய நடவடிக்கைகள் எடுத்தல் அவசியமானதாகும் முளை அருட்டாத கிழங்குகளைக் காற்றோட்டமுள்ள வெயில் பிடிக்காத ஓரளவு வெளிச்சம் பிடிக்கக் கூடிய அறையுள் மணலைப் பரப்பி அதற்கு மேல் ஒரு படை கிழங்கைப் பரவி விடவும். தனி முளை நெடுத்து வளர்ந்து இருந்தால் அம்முளையை உடைத்து விடவும். உடைத்து இரு கிழமைகளால் புதுமுளைகள் அரும்பும். விதை கிழங்கு ஒவ்வொன்றிலும் அரை அங்குல வளர்ச்சியுடைய திடகாத்திரமான 2 6 முளை அரும்புகள் இருத்தல் வேண்டும் 4 - 0 முளை அரும்புகள் இல்லாத கிழங்கை நடும் போது முளைப்பதற்கு நாட் செல்வதுடன் தொடர்ந்து மழை பெய்யுமாயின் நடப்பட்ட கிழங்குகள் அழுகவும் ஆரம்பிக்கும். எனவே முளை அரும்பிய கிழங்குகளையே நடுகைக்குப் பாவித்தல் வேண்டும்

ச. சின்னத்துரை
உதவி விவசாயப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

# அமரர் வீரசிங்கம் அவர்களின் 36வது நினைவுதினம்

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களின் 36 வது நினைவு தினம் 05 - 12 - 2000 செவ்வாய்க்கிழமை கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டிடத் தொகுதியில் 2-ம் மாடியில் காலை 10 - 30 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் திரு. செ. சண்முகநாதன் (அபிவிருத்தி) திரு சு. கணேமூர்த்தி (ப. தெ. வளர்) திரு. செ கனகசபாபதி (எண் பார்வை) ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

மானிப்பாய் இந்துக்கல்லூரிஓய்வு பெற்ற நூலகர் செல்வி இ. சுப்பையா பிள்ளை சிறப்புரை வழங்குகிறார்

அமரர் வீரசிங்கம் நினைவுப பேருரையை, யாழ், பல்கலைக்கழக தமிழ் துறைத்தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்தவுள்ளார்

யாழ். மாவட்ட கூட்டுறவுசபைத் தலைவர் திரு பெ கனகசபாபதி கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைக்க, முதன்மை விருந்தினர்கள் மங்கள விளங்கேற்ற மாவட்டச் செயலாளர் திரு சு சிவசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்த விழா ஆரம்பமாகும்.

இவ் விழாவினை ஒட்டி நடாத்தப் பெற்ற பேச்சுப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்றவர்களின் பேச்சுக்களும் முதன்மை விருந்தினர்களின் உரையும், பரிசளிப்பு வைபவமும் நடைபெறவுள்ளன.

# வணிகக் கல்வி

(முற்தொடர்)

முதலிட்டாளர் பெறும் நன்மைகள்

* இலகுவில் திறைசேரி உண்டியலை கொள்வனவு செய்யமுடியும்;
* நெருக்கடி ஏற்படின் முதனிலை வணிகரிடம்உண்டியலைகொடுத்து பணத்தை பெற்றுக்கொள்ளலாம் அல்லது அதற்கெதிராக கடன் பெறலாம்.
* முதனிலை வணிகர்களின் காப்பு சிற்றலுமாரியில் உண்டியலை பாதுகாக்க முடியும்.

5. பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக?
   1 வைப்புச் சான்றிதழ்
   2 வரிஒதுக்கல் சான்றிதழ்
   3 ரூபா பிணை பத்திரம்
   4 வணிகத்தாள்

1. வைப்புச் சான்றிதழ் :-

கறுப்புப்பணத்தை வெளிக் கொணர்வதற்காகவும் பெருமளவில் பணம் வைத்திருப்போருக்கு குறுகிய கால முதலீட்டு வாய்ப்பை வழங்கும் நோக்குடனும் 1981ல் அறிமுகப்படுத் தப்பட்டதே இச்சான்றிதழாகும் இதில் உரிமையாளர் பெயர் குறிப் பிடப்படமாட்டாது. இதனால் முத லீட்டாளரின் இரகசியத்தன்மை பாது காக்கப்படும் இதனை வைத்திருப் பவர்க்கு அரச வரிசலுகை வழங்கப் படும்.

2. வரி ஒதுக்கல் சான்றிதழ்:

அரசு வரியூடாக பெற்றுக் கொள்ளும் வருமானத்தை முன்கூட்டியே பெற் றுக்கொள்வதற்காக அரசின் சார்பில் பொதுபடுகடன் திணைக்களத்தால் வெளியிடப்பட்டு வரி இறுப்பாளர் களுக்கு விற்பனை செய்யப்படும் குறுங்கால முதலீட்டு சான்றிதழாக சமர்ப்பித்துக் கொள்வர். எஞ்சிய மீதியை பணமாக பெறலாம் அல்லது அடுத்தாண்டு சான்றிதழ் கொள்வ னவுக்குப் பயன்படுத்தலாம்.

3 ரூபா பிணைப்பத்திரம்;

1984ம் ஆண்டு ஏற்பட்ட பண நிரம்பலில் அதிகரிப்பை கட்டுப்படுத்து வதற்காக மத்திய வங்கியால் அறி முகப்படுத்தப்பட்ட குறுங்கால முத லீட்டு பத்திரமே இதுவாகும் இதற்கு பணச்சந்தை வட்டி விகிதத்தில் வட்டி வழங்கப்படும் இச்சான் றிதழின் குறைந்த பட்ச பெறுமதி 1000/- ஆகும். அரச திணைக் களங்களு், EPF, ETF, தேசிய சேமிப்பு வங்கி என்பன இதனைக் கொள்வனவு செய்ய முடியாது

4. வணிகத்தாள் : இலங்கையிலுள்ள 'ப்புளு சிப்ஸ்' (Blue Ships) கம்பனி கள் தமது குறுங்கால நிதிதேவையை ஈடு செய்வதற்கு 1993ல் மத்திய வங்கி அங்கீகாரமளித்து. அதன்படி Blue Ships கம்பனிகளால் வெளியி டப்படும் முதலீட்டு ஆவணமாக வணிகத்தாள் காணப்படுகிறது. இவ் வணிக தாளிக்கு வணிக, வியாபார அபிவிருத்தி வங்கிகள் மூகவராகவோ உத்தரவாதமளிப்பவராகவோ, முத லீட்டாளராகவோ, ஒப்புறுதியாளரா கவோ செயற்பட்டு வணிகத்தாள் சந்தையினுள் நுழைந்துள்ளன இது அரச ஆவணங்களை விட கூடிய லாபம் தரும் முதலீடாகும்.

6. முதலாம்தர, இரண்டாம் தர பங்கு சந்தைகள் தொடர்பில் நீர் விளங் கிக் கொள்வது யாது?

எவ்வித பங்குத்தரகர்களின் தலை யீடுகளுமின்றி முன்விபரணம் வெளி யிடுவதன் மூலம் கம்பனி பங்குகளை விற்பன செய்யும் போது ஏற்படும் சந்தை முதலாம் தர பங்கு சந்தை யாகும். இங்கு கம்பனியால் பங்கு விலை நிர்ணயிக்கப்படும். 1ம் தர பங்கு சந்தையில் கொள்வனவு செய்த பங்குகளை பங்குத்தரகரகள் மூலம் கேள்வி நிரம்பலினடிப்படையில் விலை தீர்மானிக்கப்பட்டு பங்குகள் விற் பனை செய்யப்படும் சந்தை 2ம் தர பங்குச்சந்தை எனப்படும்;

7. பங்குச்சந்தை தொடர்பில் காளை கள், கரடிகள், கலைமான்கள் என்ற பதங்களால் விளக்கப்படு வது யாது?

காளைகள்: எதிர்காலத்தில் பங்கின் விலை அதிகரிக்கும் என்ற ஊகத் தின் அடிப்படையில் அதிகளவான பங்கு கொள்வனவில் ஈடுபடுபவர் களை காளைகள் என குறிப்பிடுவர். இவர்கள் பங்கு சந்தையில் கேள் வியை தீர்மானிப்பவர்களாக இருப் பார்கள்.

கரடிகள் : எதிர்காலத்தில் பங்குகளின் விலைகள் குறைவடையும் என்ற ஊகத்தினடிப்படையில்தம்மிடமுள்ள பங்குகளை விற்பனை செய்பவர்களை கரடிகள் என்பர் இவர்கள் பங்கு சந் தையின் நிரம்பலை மேற்கொள்பவர் களாள இருப்பார்கள்.

கலைமான்கள் ; குறைந்த விலையில் பங்குகளை கொள்வனவு செய்து தமக்கு சாதகமான கால பகுதியில் (விலை உயர்வு காலத்தில்) விற் பனை செய்து இலாபம் உழைப்பவர் களே இவர்களாவர்;

8. கொழும்பு பங்கு சந்தையில் செயற் படும் தரகர் நிறுவனங்களை குறிப் பிடுக?

*1. John Keets Stock Brokers (pvt) Ltd.*
*2. Marcantile Stock Brokers (pvt) Ltd.*
*3 J. B. Stock Brokers and Financial Service (pvt) Ltd.*
*4. Commercial Stock Brokers (pvt) Ltd.*
*5. Forbes and walker Stock Brockers (pvt) Ltd.*
*6 Serendip Taust Services Ltd.*
*7. Lanka Seeurities (pvt) Ltd.*
*8. De Silva and And Abeyawardana Stock Brokers (pvt) Ltd*
*9. Samerville Stock Brokers (pvt) Ltd*
*10. Asia Stock Broking and inverstment Mercant (pvt)Ltd*
*11. Bartheet mallory Stock Brokers (pvt) Ltd.*


வே. மணிவதனன்
முகாமைத்துவதுறை
முகாமைத்துவ வணிகபீடம்
யாழ் பல்கலைக்கழகம்


9. இலங்கை பிணையங்கள் பரிவர்த் தனை ஆணைக்குழுவை வரைய றுத்து இதன் தொழிற்பாடுகளை தருக?

பங்குச் சந்தை நடவடிக்கை களை மேற்பார்வை செய்யவும் கட் டுப்படுத்தவும் என 1987ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அமைப்பே பின்னர் 1991ம் ஆண்டு கம்பனிகள் திருத்த சட்டமூலம் இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனைஆணைக்குழுஎனபெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது,

i அரச கொள்கைகளை பங்குசந் தையில் நடைமுறைப்படுத்தல்
ii பங்குத் தரகர்களுக்கு அனுமதி
iii பங்குச்சந்தை தொடர்பில் அர சுக்கு ஆலோசனை வழங்கல்

போன்ற தொழிற்பாடுகளை ஆற்று கிறது.

10. நிதிக்கம்பனி முதலீட்டாளர் பாது காப்பு கருதி மத்திய வங்கி நிதிக் கம்பனிகள் மீது விதித்துள்ள கட் டுப்பாடுகளை கூறுக?

முதலீட்டாளர்களின் நலன் கருதி மத்திய வங்கி 1989ல் நிதிக்கம்பனி கள் சட்டத்தை கொண்டுவந்ததுடன்

( 11-ம் பக்கம் பார்க்க )

# கூட்டுறவு இயக்கத்தின் பூரண வெற்றிக்கும் நல்லியக்கத்திற்கும் அவசியமான காரணிகள்

சமுதாயத்திலுள்ள எந்தவொரு அமைப்போ நிறுவனமோ, தனிநபரோ தமது நோக்கங்களையும், அபிலாசைகளையும் பூரணமாகவும், இலகுவாகவும் நிறைவு செய்து கொள்ளுவதற்கு பல வசதிகளும் தேவைகளும் இருக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். போதிய வசதிகளும், தேவைகளும் போதிய மட்டில் இல்லாமையால் பல அமைப்புக்களும் நிறுவனங்களும் தோல்வியடைந்ததை நாம் கடந்த கால வரலாற்றில் நிறையக் கண்டு கொள்ளலாம்.

இந்நிலையில் கூட்டுறவு நிறுவனமொன்றின் பூரண வெற்றிக்கும் நல்லியக்கத்திற்கும் இன்றியமையாத வசதிகளையும், தேவைகளையும் பற்றி நன்கு ஆய்வு செய்து அவற்றைப் போதிய மட்டில் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டியது கூட்டுறவு நிறுவனம் ஒவ்வொன்றினதும் முக்கிய கடப்பாடாகும். கூட்டுறவு நிறுவனங்களின் நல்லியக்கத்திற்கு அவசியமான காரணிகளைப் பற்றியும், அவற்றிலுள்ள குறைபாடுகளைப்பற்றியும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளைப் பற்றியும் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

### அறிவும், ஆற்றலும், விசுவாசமுமுள்ள அங்கத்தவர் :

ஒரு நிறுவனத்தின் பூரண வெற்றி அதன் சொந்தக்காரர்களினதும் அங்கத்தவர்களினதும் அறிவிலும், ஆற்றலிலும் அவர்கள் நிறுவனத்தின் மீது கொண்டுள்ள விசுவாசத்திலுமே முழுமையாகத் தங்கியுள்ளது. ஒரு கூட்டுறவு நிறுவனத்தின் சொந்தக்காரர்கள் அதன அங்கத்தவர்களே. கூட்டுறவு நிறுவனத்தின் அங்கத்தவர்களே அச்சங்கத்தின் முதுகெலும்பாகும். கூட்டுறவு சங்க அங்கத்தவர்கள் அனைவரும் போதிய கூட்டுறவு அறிவும் ஆற்றலும் சங்கத்தின் மீது விசுவாசமும் உள்ளவர்களாக இருந்தால மட்டுமே சங்கம் பூரண வெற்றியைக் காணமுடியும். அங்கத்தவர்களின் முழுமையான பங்களிப்பின்றிச் சங்கங்கள் சிறப்பாகச் செயற்பட முடியாது.

ஒரு நிறுவனத்தைப்பற்றியபூரண அறிவற்றவர்களும், ஆற்றலற்றவர்களும், அதன் மீது விசுவாசமற்றவர்களும் அந்நிறுவனத்தின் எதிரிகளாகும். '' கூட்டுறவில் போதிய அறிவற்ற அங்கத்தவர்கள் கூட்டுறவின் எதிரியும் விரோதியுமாகும் '' என்பது ஒரு ஆங்கிலச் சொற்றொடரின் மொழி பெயர்ப்பாகும். '' அறிவு '' மனித வாழ்வின் உயிர்நாடி அறிவே மனிதனைச் சீரும் சிறப்புடனும் பண்பாக வாழ வித்திடுகின்றது. அறிவற்ற மனிதன் சமுதாயத்தில் சிறப்பாகவும் பண்பாகவும் வாழமுடியாது. மனித மேம்பாட்டிற்கும், சமுதாய மேம்பாட்டுக்கும் அறிவு மூல ஊற்றாக விளங்குவது போன்று ஒரு கூட்டுறவு நிறுவனத்தின் நல்லியக்கத்திற்கும் அறிவு மூல ஊற்றாக விளங்குகின்றது ஒரு கூட்டுறவு நிறுவனத்தின் நல்லியக்கத்திற்கு அதன் அங்கத்தவர்கள் அனைவரும் பூரண கூட்டுறவு பற்றிய அறிவுடையவர்களாக இருக்க வேண்டியது மிக அவசியமாகும் கூட்டுறவு அறிவற்ற அங்கத்தவர்கள் கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் நல்லியக்கத்திற்கும் ஊறு விளைவிப்பவர்களாகவே விளங்குவர்.

மனித வாழ்வின் பூரண வெற்றிக்கு உறுதுணையாக அறிவு விளங்குவதைப் போன்று ''மனிதஆற்றலும்'' மனித வாழ்வின் பூரண வெற்றிக்கு அத்திவாரமாக. விளங்குகின்றது ஆகலால ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் பூரண வெற்றிக்கு அதன் அங்கத்தவர்கள் அனைவரும் ஆற்றலும், கடின உழைப்பும் உள்ளவர்களாக இருக்க வேண்டியது மிக அவசியமாகும் ஆற்றலும் கடின உழைப்பும் இல்லாத அங்கத்தவர்களால் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றிக்கு எந்த வித பங்களிப்பும் செய்ய முடியாது.

ஒரு '' இலட்சியக் குடும்பத் தலைவன் '' தனது குடும்பத்தின் மீதும் பிள்ளைகள் மீதும் எவ்வளவு பாசத்துடனும் பற்றுடனும் செயற்படுகின்றானோ அவ்வளவு பற்றுடனும் விசுவாசத்துடனும் ஒரு அங்கத்தவன் கூட்டுறவுச்சங்கம் தொடர்பான செயற்பாடுகளில் செயற்பட்டால் மட்டுமே கூட்டுறவுச்சங்கம் பூரண வெற்றியைப் பெறமுடியும். கூட்டுறவு அறிவும், ஆற்றலும் உழைப்பும் விசுவாசமும் உள்ள அங்கத்தவனே ஒரு சிறந்த '' கூட்டுறவு இலட்சிய அங்கத்தவனாகும் '' இவனே உண்மையான கூட்டுறவாளனாகும். ஏனைய அனைவரும் போலிக் கூட்டுறவாளர்களும் போலி அங்கத்தவர்களுமேயாகும்.

கூட்டுறவுச்சங்கம் எமது சொந்த நிறுவனம் அது எமது பொருளாதார சமூக கலாச்சார மேம்பாட்டுக்காகவே உருவாக்கப்பட்டுள்ளது: ஆகலால் எமது சங்கத்தின் செயற்பாட்டில் ஏற்படும் தளம்பல்களும், தாக்கங்களும் எமது மேம்பாட்டைப் பாதிக்குமென்ற உயர்ந்த மனப்பான்மையுடன் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் சங்கத்தின் செயற்பாடுகளிலும் நிர்வாகத்திலும் முழுமையான ஈடுபாடும் அக்கறையும் உள்ளவர்களாகச் செயற்பட்டால் மட்டுமே சங்கம் பூரண வெற்றியை அடைய முடியும்.

---

**இ. சுப்பிரமணியம்**
இளைப்பாறிய அதிபர் கூட்டுறவு
அபிவிருத்தி நிலையம் யாழ்ப்பாணம்.

---

இதனால்தான் 1995ம் ஆண்டு அகில உலக கூட்டுறவுச் சம்மேளனம் பிரகடனப்படுத்தியுள்ள இருபத்தியோராம் நூற்றாண்டுக்கான நவீன கூட்டுறவுக் கொள்கைகளில் '' அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு'' என்ற புதிய கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தமது முழுமையான பங்களிப்பை பின்வரும் வழிகளில் தமது சங்கத்திற்கு தவறாது வளங்க முன்வருதல் வேண்டும்.

### கூட்டுறவுச் சங்கத்திற்கு அங்கத்தவர்களின் பங்களிபபு :

1. அங்கத்தவர்கள் அனைவரும்கூட்டுறவுடன் தொடர்புடைய பொதுச் சட்டம், கூட்டுறவுச்சட்டம், கூட்டுறவு விதிகள், கூட்டுறவு உபவிதிகள், சுற்றுநிருபங்கள், கூட்டுறவுக் கொள்கைகள், கூட்டுறவுப்பண்புகள் என்பவற்றில் விபரிக்கப்பட்டுள்ள தமது கடமைகள், உரிமைகள், அதிகாரங்கள் பொறுப்புக்கள் என்பவற்றைத் தெளிவாக உணர்ந்து கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

2. அங்கத்தவர் அனைவரும் சங்கம் தனது உப விதியில் கூறப்பட்டுள்ள

(9ம் பக்கம் பார்க்க)

# நேர முகாமைத்துவம் - TIME MANAGEMENT

**நேர முகாமைத்துவம் :**

ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் அந்த நிறுவனத்தைச் சிறந்த முறையில் இயங்கச் செய்ய கடுமையாக உழைக்கவேண்டிவரும். அவருக்குள்ள பலதரப்பட்ட வேலைகளைச் செய்து முடிக்க நேரம் போதவில்லையே என்று அங்கலாய்க்கலாம். எப்படி தனக்குள்ள வேலைகளை தனது நேரத்தில் நேரத்தை வீணடிக்காமல் செய்து முடிக்கலாம் என்று நெறிப்படுத்துவது நேர முகாமைத்துவமாகும். அதாவது எக்கருமமாயினும் எவ்வாறு குறைந்த நேரத்தில் அல்லது குறிப்பிட்ட நேரத்தில் சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும் என்பதாகும். சிறந்த முகாமைத்துவம் என்பது திறன்வாய்ந்த முகாமையாளரிலேயே தங்கியிருப்பதினால் நேரத்தை முகாமை செய்யும் திறனும் இவரின் செயற்பாடாகின்றது.

முகாமையாளரானவர் தானென்னென்ன வேலைகளைச் செய்து முடிக்க வேண்டும்? அதற்காக அடைய வேண்டிய குறிக்கோள்கள் என்ன? என்பதாக தன் கடமைகளுக்கும் குறிக்கோள்களுக்கும் இடையிலான முன்னுரிமைகளை வரிசைப்படுத்தி நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**எப்படி நேரத்தைச் செலவு செய்வது :**

முன்னுரிமை அடிப்படையில் கடமைகளை முகாமையாளர் தெரிவு படுத்திய பின் மிகவும் நுணுக்கமாக எப்படி நேரத்தை செலவு செய்ய வேண்டும் என்பதை ஆராய்தல் வேண்டும். நேரத்தை ஆராய்வதற்குச் சிறந்த வழி தினக்குறிப்பை எழுதி வைத்திருப்பது தான் இதனை ஒரு கிழமைக்கோ அல்லது இரண்டு, மூன்று கிழமைக்கோ செய்தல் வேண்டும். ஒரு தினத்தை 15 நிமிடக் கூறுகளாகப் பிரித்து ஒவ்வொருகூறுக் காலத்திலும் என்ன செய்தார் என்பதனைக் குறிப்பதோடு. ஒவ்வொரு செயலுக்கும் நேரே எப்படிப்பயனுள்ளதாக நேரத்தைச் செலவு செய்தார் என்பதனையும் ஆராய்தல் வேண்டும்.

**ஒழுங்கமைத்துக் கொள்ளல் :**

முகாமையாளர் அல்லதுமுகாமை தன் வேலைகளை என்னமாதிரி செய்து முடிக்கவேண்டும் என்று திட்டமிடுகிறாரோ? அதன் குறைபாடுகளை வெளிக்கொண்டு வருவதுடன் முன்னுரிமைகளையும் இந்த மாதிரியான ஆராய்வுகள் காட்டும். செய்து முடிக்க வேண்டிய வேலைகளை கிடைக்க கூடிய நேரத்தில் செய்து முடிக்கக் கூடியதாகப்பொருத்துவதுடன் வேலைகளின்முக்கியத்துவ வரிசைப்படி செய்து முடித்தல் அவசியம். பல தரப்பட்ட மாறுபாடான நெருக்கடிக்குள் வேலை செய்யும் போது வேலைச் சிக்கல்களிலிருந்து மீள நெருக்கடி நடவடிக்கைகளில் தங்கியிருக்க முடியாது. ஒரு நாளிலோ அல்லது ஒரு கிழமையிலோ செய்ய வேண்டிய வேலைகளைக் கூடியகவனமெடுத்து ஒருங்கிணைத்து இயல்பு கடந்த நெருக்கடிநிலையில் செய்ய வேண்டிய தேவையைக் குறைப்பது தான் நேர ஒழுங்குபடுத்தலாகும்.

**தினக்குறிப்பைப் பாவித்தல் :**

ஒரு கிழமையில் ஆகக்குறைந்தது ஒரு நாளாகுதல் ஏதாவது கூட்டம் வைப்பதை இல்லாமல் செய்வதற்கு முயலவேண்டும். அத்தோடு ஒரு நாளைக்கு எந்த விதவேலைகளையும் நிகழ்வதனைத் தடுத்து திட்டமிடுவதற்கு, வாசிப்பதற்கு, யோசிப்பதற்கு, எழுதுவதற்கு மற்றும் எதிர்பாராத வேறு வேலைகளைச் செய்வதற்கு என்று ஒதுக்கி கொடுக்கப்படாத நேரத்தை தனியேவைத்திருத்தல் வேண்டும். முகாமையாளர் ஒவ்வொரு கிழமைத் தொடக்கத்திலும் தினக்குறிப்பைப் பார்த்து எப்படி நேரத்தை செலவழிக்கப்போகிறார் என்று திட்டமிடுவதோடு, ஒவ்வொரு செயற்பாடுகளையும் மதிப்பீடு செய்து முன்னுரிமைகளைத் தெரிவு செய்வதோடு கடிதத் தொடர்புகளுக்கும் ஆட்களைச் சந்திப்பதற்கும் நேரக் கூறுகளை தனியே வைத்திருக்க வேண்டும்,

ஒவ்வொரு நாள் தொடக்கத்திலும் தினக்குறிப்பைப் பார்த்து அன்றைய திட்டங்கள் மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்கள் என்பதை சரிபார்ப்பதோடு முதல் நாள் தினக் கூட்டிணைப்பு படிவத்தைப் பார்த்து மீதமுள்ள கவனிக்க வேண்டியவை அல்லது செய்து முடிக்க வேண்டியவை என்ன என்பதனையும் கவனிக்க வேண்டும். அதன் பின் என்ன செய்ய வேண்டும் என்பதனை எழுதல் வேண்டும்

1 கூட்டங்களும் நேர் முகங்களும்
2 தொலைபேசி அழைப்புக்கள்
3 முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க வேண்டிய பணிகள்

A இன்று செய்து முடிக்க வேண்டியவை

B இன்று செய்து முடிக்க வேண்டியவை, ஆனால் நாளை வரை தள்ளிப்போடக் கூடியவை

C பின்பு செய்து முடிக்கக் கூடியவை

A யிலும் B யிலும் உள்ள பணிகளை முன்னுரிமை வரிசையில் இன்றைய நாளில் எப்பொழுது செய்து முடிக்கப் போகிறார் என்பதனை பாந்தளவில் திட்டமிட்டு, ஒவ்வொன்றையும் செய்து முடித்த பின் கீறி விடலாம்: இந்தப்பட்டியலை மறுநாள் சரிபார்க்கவென வைத்திருக்கலாம்.

**வ. வே. மணிமாறன்**
விரிவுரையாளர் பிரதேச கூட்டுறவுப் பயிற்சி நிலையம் யாழ்ப்பாணம்.

**மற்றையோரை ஒழுங்குபடுத்தல்:**

முகாமையாளரின் முதலாவது கடமை தன்னை ஒழுங்குபடுத்தலேயெனினும் மற்றையோரையும் நேர முகாமைத்துவத்திற்குள் கொண்டுவரின் அது அவர்களுக்கும் நிறுவனத்திற்கும் பயனுடையதாக அமைவதோடு முகாமையாளருக்கும் அவர்களால் உதவமுடியும். மற்றையோர் என்பதில் முகாமையாளரின் செயலாளர், சகபாடிகள், கீழ் வேலை செய்வோர், தொடர்புடைய வெளியாட்கள் என அடங்குவர்.

ஒவ்வொரு திறமையானமுகாமையாளரும் திறமையான செயலாளரில் தான் மிகவும் தங்கியிருக்கிறார். ஏனெனில் செயலாளரானவர் கடிதங்களை முன்னுரிமைப்படுத்தி வைத்தல் தேவையற்ற வருகையாளர்களை நிறுத்தி வைத்தல், தேவையற்ற தொலைபேசி அழைப்புக்களை இடைமறித்தல், தேவையான போதுதேவையானவர்களுடன் உடனடித்தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திக்கொடுத்தல், முகாமையாளரின் ஏற்பாடுகளை கவனித்தல், வழமையான அல்லது சாதாரண கடிதங்களுக்கான நடவடிக்கைகளை தானே எடுத்தல்

(8ம் பக்கம் பார்க்க).

# கூட்டுறவு விசாரணைக்குழுவுக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை சமர்ப்பித்த ஆலோசனைகள்

1. கொள்கை

1. 1 கூட்டுறவுத் துறையில் அங்கத்தவர்கள் கூடுதலாக பங்குபற்றக் கூடியவாறு கட்டமைப்பை மாற்றுதல்

1. 2 ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் பிராந்தியங்களில் இணைக்கப்பட்டு பின்னர் மாவட்டங்களில் ஒரு அமைப்பாக செயல்படுதல்

அ) மாவட்ட மட்டச் சங்கங்கள் மாகாண சபை மட்டங்களில் இணைக்கப்பட்டு மாகாண அமைப்பை உருவாக்குதல்

இவ்வாறு எல்லாச் சங்கங்களும் இணைந்து மாவட்ட, மாகாண, மட்டங்களில் தங்களது அமைப்பை உருவாக்கி அவ் அமைப்புக்கள் தேசிய மட்டத்தில் ஒரு அமைப்பை உருவாக்கி அதனை சாக் அமைப்பு, சர்வதேச கூட்டுறவு சம்மேளனம் என்பவற்றுடன் இணைப்பை உருவாக்குவதன் மூலம் சகல கூட்டுறவு அமைப்புக்களும் வசதிகளையும், வாய்ப்புக்களையும் பெற சந்தர்ப்பம் அளித்தல்.

1. 3 கூட்டுறவுக் கல்வியை கூட்டுறவுடன் தொடர்புபட்ட சகலருக்கும் கட்டாயப்படுத்தக் கூடியதான கொள்கையை உருவாக்குதல்.

1. உறுப்பினர்களாக வருபவர்கள் கூட்டுறவு தொடர்பான பொதுவான பயிற்சியை பெறல்.

1 1 கிராமிய மட்டங்களில் கிளைக்குழு போன்ற அமைப்புக்களுக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் கூட்டுறவுக் கல்வியுடன் கிராமிய அபிவிருத்தி தொடர்பான கல்வியைப் பெற்றிருத்தல்.

1 4 சங்கங்களை நிர்வகிப்பதற்கு தெரிவு செய்யப்படுபவர்கள் சங்க முகாமை, பிரதேச அபிவிருத்தி, கூட்டுறவுடன் தொடர்புபட்ட விடயங்கள் பற்றி அறிவைப்பெற வேண்டியதன் அவசியம்.

1. 5 கூட்டுறவுத் துறை இப்பொழுது ஒரு தனிச்துறையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனவே கூட்டுறவுத் துறைக்கென ஒரு வரையறுக்கப்பட்ட ஒரு இடம் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், அரச துறை, தனியார் துறை என்பவற்றுக்கு அப்பால் அங்கத்தவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்டதே கூட்டுறவாகும் இத்துறையின் செயல்பாடு இன்று சமூகத்தில் கூடிய பங்கு வகிப்பதுடன், சமூக நிறுவனமாகவும் செயல்படுகின்றது எனவே இத்துறை நாட்டிலுள்ள வசதியற்றவர்களுக்கு துணைபுரிகின்ற நிறுவனமாக இருப்பதனால் அரசாங்கம் இத்துறைக்கான சில வாய்ப்புக்களை அளிக்க வேண்டியது அவசியமாகும்.

இத்துறையுடன் தேசிய ரீதியில் பல்லாயிரக்கணக்கான பணியாளர்களும், இலட்சக்கணக்கான அங்கத்தவர்களும் தொடர்புபட்ட ஒரு துறையாகும். இந்நிறுவனத்தின் உயர்ச்சி தேசிய பொருளாதாரத்தில் பாரிய மாற்றங்களை உருவாக்கும் ஆதலால் அரச கொள்கையில் கூட்டுறவுத்துறைக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய தேசியக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

தேசியக் கொள்கையில் கூட்டுறவுக்கு முக்கியத்துவம் அளித்து நாட்டின் தேசிய, பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுத்துறையையும் பங்காளியாக்குதல் அவசியம்.

1. அரசாங்க நிறுவனங்களுக்கு தேவைப்படும் விநியோகங்களை கூட்டுறவு நிறுவனங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளல் கூட்டுறவுத்துறை இதனை சரிவரமேற்கொள்வதற்கான வள அபிவிருத்தியை ஆரம்பத்தில் அரசாங்கம் மேற்கொண்டு சலுகை அழித்து வழிநடத்தல்

2. போக்குவரத்து சேவையில் கூட்டுறவுத்துறையும் ஈடுபடக்கூடியளவிற்கு குறிக்கப்பட்ட காலத்திற்கு மூலதன உதவியை வழங்குதல்.

3. அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்திற்கு முன்னுரிமையை கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கல்.

4. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசினால் அறவிடப்படும் சகல வரிகளில் இருந்தும் விலக்களித்தல்

1. 6 கூட்டுறவுத் துறையில் இப்பொழுது இருக்கின்ற கூடுதலான கட்டுப்பாடுகளை நீக்கி சுதந்திரமாக கூட்டுறவு இயக்கம் செயல்பட வழிவகுத்தல்

1 7 கூட்டுறவுச் சங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தும் வருமதியாளர்களிடம் இருந்து அதனை விரைவாக அறவிட பொருத்தமான சட்ட ஏற்பாடுகளை செய்தல்

1. 8 கூட்டுறவு என்றபாடத்தை பாடசாலைகளில் ஒரு பாடமாக போதிக்கவும், பல்கலைக்கழக மட்டத்தில் இதனை கற்கவும் வசதிகளை ஏற்படுத்தல்

1. 9 கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்யும் பணியாளர்களின் சம்பளத்தினை உள்ளூராட்சி துறை போல முழுமையாக அல்லது பாதியாகவே மானியமாக அரசு வழங்கல்

1 10 தேசிய வரவு செலவுத் திட்டத்தில் கூட்டுறவுக் கல்விக்கென ஏனைய துறைகளிற்கு ஒதுக்குவதைப் போன்று கூட்டுறவுக் கல்விக்கு ஒதுக்குதல்

1. 11 தற்பொழுது அறவிடப்படும் கூட்டுறவு நிதியை மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைக்கு முழுமையாக வழங்கல்

1: 12 கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்யும் பணியாளர்களின் இரத்த உறவினர்கள் நிர்வாகசபையில் இடம்பெறாது இருக்க இந்தியாவில் இருப்பதைப்போல இலங்கையிலும் நடைமுறைப்படுத்தல்.

1; 13 பணியாளர்களுக்கு ஓய்வூதியத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது

1, 14 கூட்டுறவுப் பயிற்சிபெற்றவர்கள் மட்டுமே கூட்டுறவுச் சங்கங்களில் பதவிகளைப் பெற முடியும் என்பதை வலியுறுத்தல்.

1. 15 கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறும் மத்தியஸ்த தீர்ப்புக்கள் விரைவாக நடைபெற்று அறவீடுகள் உடனடியாக செய்ய நடவடிக்கை எடுத்தல்,

1,16 மாவட்டக் கூட்டுறவுச் சபைகள் மாகாணசபை மட்டத்தில் இணைக்கப்பட்டு மாகாண கூட்டுறவுச் சபை அமைக்கப்படுதல் வேண்டும்.

## கூட்டுறவு விசாரணைக்குழுவுக்கு...

*(6ம் பக்கத் தொடர்ச்சி)*

கௌரவ ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமார துங்கா அவர்களினால் இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மாகாண கூட்டுறவுச்சபை தேசிய மட்டத்தில் இணைக்கப்பட்டு கூட்டுறவுச் சபை உருவாக்கப்பட வேண்டும்

* மாகாண கூட்டுறவுச் சபை, சார்க் அமைப்பு சர்வதேச கூட்டுறவு சம்மேளனம், சர்வதேச தொழிலாளர் அமைப்பு, ஏனைய வெளிநாட்டு கூட்டுறவு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள, பயிற்சி பெற, நிதி உதவி பெற வாய்ப்புக்களை தேசிய மட்ட நிறுவனம் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக கொள்கையை உருவாக்கல்,

1. 17 கூட்டுறவுச்சொத்துபொதுச் சொத்தாக கருதப்படல் வேண்டும்.

1, 18 கூட்டுறவுச்சங்கங்கள் தங்கள் எல்லைக்குள்ளேயே செயல்பட வேண்டுமென்பதை சட்டத்தில் சேர்க்க வேண்டும்.

1. 19 கூட்டுறவுச் சங்கங்கள் பாவிக்கப்படும் நிதியை எது அரசநிதி என்பதை தெளிவு படுத்த வேண்டும்.

1, 20 கூட்டுறவுச் சங்கத்தில் செயல்படும் அங்கத்தவர்களை அடிப்படையாகக் கொண்டே நிறைவெண் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

2 கட்டமைப்பு :.

2. 1 தற்போதுள்ள சில கூட்டுறவுச்சங்கங்கள் குறிப்பாக ப.நோ கூ. சங்கங்களாக பாரிய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களாக இருப்பதனால் அங்கத்தவர் பங்களிப்பு மிகக் குறைவாக காணப்படுகிறது இதனை மாற்றுவதற்கு பொருளாதார ரீதியாக செயல்படக் கூடிய சங்கங்களாகவும் அங்கத்தவர் பங்களிப்பு செய்யக் கூடிய நிலையிலும் உருவாக்கப்பட வேண்டும்.

2 2 கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி புரிவதற்காக மக்கள் வங்கி அமைக்கப்பட்ட பொழுதிலும் அதன் செயற்பாடு கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்று போதியதாக இல்லை கூட்டுறவுச் சங்கங்கள் கிராமிய வங்கிகளில் சமாசங்களை அமைத்த பொழுதும் அவை வர்த்தக வங்கிகளில் செயல்பாடுகளை செய்யாமையால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான நிதியை பெறமுடியாதுள்ளது எனவே கூட்டுறவுத்துறையை முன்னேற்றுவதற்கு வர்த்தக வங்கி ஒன்று அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

2. 3 பணியாளர் நியமனம், தெரிவு செய்தல் மாற்றம் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் செயல்படக்கூடிய அமைப்பு ஒன்றை உருவாக்குதல். இவ் அமைப்பு மேல்மட்ட, நடுத்தர பணியாளர்களின் நியமனம், இடமாற்றம் ஆகியவற்றை செயல்படுத்தல், கீழ்மட்ட பணியாளர்களை பணியாளர் நியமனம், தெரிவு செய்தல் என்பவற்றை அந்தந்த சங்கமே மேற்கொள்வதற்கான வழிவகைகளை உருவாக்குதல் இவ்வாறான அமைப்புக்களை உருவாக்கும் போது பணியாளர்களை பாதியா வண்ணம் சுதந்திரமாக சய படக்கூடியஅமைப்பாக மாவட்ட மட்டங்களுக்கு கூட்டுறவு சேவை ஆணைக்குழுவி.ர் அதிகாரங்களை பன்முகப்படுத்துவது.

2. 4 தற்பொழுது மாவட்டக் கூட்டுறவு சபை மாவட்ட மட்டத்தில் கூட்டுறவுச் கல்வியை செயல்படுத்துவதில் பெரும் பங்கினை வகித்து வருகிறது எனினும் இவ் அமைப்பு போதிய அளவு நிதி வசதி இல்லாமையால் ஏனைய துறையுடன் ஒப்பிட்டுரீதியாக கூட்டுறவுக்கல்வியை முன்னேற்ற முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. எனவே கூட்டுறவுச் சபையின் கல்வி அமைப்பை சீர்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது.

அ) ஒவ்வொருமாவட்டத்திலும் தற்போதைய சூழ்நிலைக்கேற்பபௌதீக, மனித வளங்களை உடையதான கூட்டுறவுக் கல்லூரியை அமைத்தல் வேண்டும்.

ஆ) இக் கூட்டுறவுக் கல்லூரிக்கு மேலாக ஒவ்வொரு மாகாணசபை மட்டத்திலும் மாகாணக் கூட்டுறவுக் கல்லூரி அமைத்தல்

இ) தேசியக் கூட்டுறவுக்கல்லூரி ஒன்று அமைத்தல் வேண்டும்.

இதில் மாவட்ட மட்டத்தில் அமைககப்படும் கல்லூரி கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர கனிஷ்ட சாதாரண உயர்தர பயிற்சிகளை வழங்கக்குடியதாகவும்,

செயல்பாட்டு மட்ட பணியாளர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிகளையும் அளித்தல் வேண்டும்.

அங்கத்தவர், நிர்வாகிகளுக்கான பயிற்சியை வழங்கல்.

மகாண மட்ட நிறுவனம் டிப்ளோமாப்பயிற்சி, நடுத்தர, மேல்மட்ட முகாமைப் பணியாளர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வழங்குவதுடன் அங்கத்துவ நிர்வாகிகளுக்கான பயிற்சியை வழங்கல்.

தேசியக் கல்லூரி பயிற்றுனர்களுக்கான பயிற்சியை அளித்தல் நிர்வ கிகளுக்கான பயிற்சியை வழங்கல்

கூட்டுறவுத்துறை தொடர்பான ஆராய்ச்சி, தகவல் மையப்படுத்தல், வெளிநாட்டு கூட்டுறவு தொடர்பான தகவல்களை பெற்று வழங்கல்

2,5 1 கணக்காய்வினை கூட்டுறவுத்திணைக்களம் நிதியாண்டு முடிந்து ஆறு மாத காலத்திற்குள் பூர்த்தி செய்தல்

2 கணக்காய்வு அறிக்கைகளை கூட்டுறவுச் சங்கநிர்வாகிகள் பொதுச் சபையில் சமர்ப்பித்து 6 மாத காலத்திற்குள் அங்கீகாரத்தைப் பெறல்.

# நேர முகாமைத்துவம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

என்றவாறு பல்வேறு பணிகளைச் செய்வதன் மூலம் முகாமையாளரானவர் குறிப்பிட்ட நேரத்திற்குள் திறனாக செயலாற்ற உதவமுடியும் என்பதனாலாகும்.

சகபாடிகளுக்கு நேரத்தைதேவையில்லாமல் வீணடிக்க வேண்டாமென்று சொல்லி வைக்க முயற்சி பண்ணும்அதே வேளை அவர்கள் முக்கியமான விடயங்கள் சம்பந்தமாய் பேசுவதைத் தடுக்கும் வகையில் கோபப்படுத்தக்கூடாது.

கீழ்பணிபுரிவோருக்கு என்னென்ன வேலைகளைக் கையளிக்கலாம் என்பதை முறையாகத் தீர்மானிப்பின் நேரத்தை எவ்வளவோ மீதப்படுத்தலாம். முகாமையாளர் முக்கிய விடயத்தில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் கீழ்பணியாளர்கள் சந்திக்க விரும்பின முடியாது என்று சொல்ல பழகிக் கொள்ள வேண்டும். அதே வேளை இவர்கள் எப்போது சந்தித்துப் பேசலாம் என்று ஒரு குறிப்பிட்ட நேரத்தைத் தெரிவிக்க வேண்டும். கீழ்ப்பணியாளர்களுடன் அவர்களது வேலைகள் தொடர்பாகவும் அவர்களது வெளிப்புற ஈடுபாடுகள் பற்றியும் பொதுவாகப் பேசுவது என்பது நேரத்தைமுறையாகச்செலவு செய்யப்பட்டது என்பது தான்.

வெளிப்புறத் தொடர்புகளுக்கு வெளியார் முறையான ஏற்பாடுகள் இல்லாமல் பார்ப்பதற்கு இடமளிக்காதிருத்தல், தேவையற்ற தொலைபேசி அழைப்புக்களைத் தடுக்க செயலாளரை பணித்தல், வெளியார் சந்திப்பு எப்பொழுது வைக்கப்பட்டுள்ளதென தெரியப்படுத்துதல் போன்றவற்றால் முகாமை நேர விரையத்தை குறைக்கலாம்.

## உங்கள் நேரத்தினை எவ்வாறு முகாமை செய்வது :

அலுவலகத்தில் வேலை செய்யும் ஒவ்வொருவரும் தங்களது நேரத்தினை எவ்வாறு முகாமை செய்தல் வேண்டும் என்பது பற்றி அறிந்திருத்தல் வேண்டும். நேரம் ஒரு வரையறுக்கப்பட்டவளமாகும் அத்துடன் பெறுமதியுடையது அலுவலகத்தில் கடமை புரியும் ஒவ்வொருவரும் தமதுகடமைகளை ஒழுங்காகமேற்கொள்வதற்கும் இறுதியாக நிறுவனம் தனது நோக்கத்தினை அடைவதற்கும் நேரம் சரியாக முகாமை செய்யப்படுதல் அவசியமானதாகும்.

ஒருவர் தனது நேரத்தினை அலுவலகத்தில் சரியாக முகாமை செய்வதற்கு பின்வரும் ஆலோசனைகளைப் பின்பற்றுதல் சிறந்தது.

1 தினமும் அலுவலகத்திற்கு எவ்வளவுமுன்கூட்டிச்செல்ல முடியுமோ அவ்வாறு செல்லுதல்வேண்டும். அலுவலக நேரத்திற்கு முன்பு அலுவலகத்திற்கு செல்வதால் ஏனைய இடையீடுகள் அலுவலகத்தில் காணப்படமாட்டாது இதனால் உங்கள் கடமைகளை திறமையாக நிறைவேற்ற முடியும்.

2. கடினமான வேலையை முதலில் மேற்கொள்ளல் வேண்டும். பின்னர் சுலபமான வேலையை மேற்கொள்ளலாம்.

3. வேலைகளைத் திட்டமிடுதல் வேண்டும். திட்டமிட்டபடி கருமங்கள் நிறைவேற்றுதல் வேண்டும். முன்னுரிமை அடிப்படையில் வேலைகளைத் திட்டமிடுங்கள். நாட்குறிப்பினைப் பயன்படுத்தி வேலையைத் திட்டமிடலாம்.

4. வேலையை மேற்கொள்ளும் போது இலக்குகளை நிர்ணயித்தல் குறிப்பிட்ட நாளில் அல்லது வாரத்தில் நிறைவேற்ற வேண்டிய வேலையின் அளவினைத் தீர்மானித்து, அவற்றினைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்தல்.

5. அலுவலகத்தில் தேவையற்ற உரையாடல்களைத் தவிர்த்துக் கொள்ளல்.

6. உங்களை உத்தியோக விடயமாகச் சந்திக்க வருபவர்களுடன் அவ்விடயம் தவிர ஏனைய விடயங்கள் தொடர்பாக உரையாடுதலைத் தவிர்த்துக் கொள்ளுதல், இதனால் உங்கள் நேரம் மீதப்படுவதுடன், உங்களைச் சந்திப்பதற்காக உள்ளவர்களும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய தேவை ஏற்படாது.

7. ஊழியர்கள் பொதுமக்கள் மற்றும் ஏனையவர்கள் உத்தியோக ரீதியான விடயங்கள் தொடர்பாக உங்களைச் சந்திப்பதற்காக ஒரு குறிப்பிட்ட நேரத்தினை ஒதுக்குதல் சிறந்தது. இதன் மூலம் ஏனைய நேரங்களில் அலுவலக ஊழியர்கள் தங்களது கடமைகளைத் தடையின்றி மேற்கொள்ள முடிகின்றது.

8. தொடர்புடைய வேலைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளல், இதன் மூலம் நேரத்தினை சிக்கனமாகப் பயன்படுத்தலாம். உதாரணமாகத் தொலைபேசி மூலம் பலருடனும் தொடர்பு கொள்ள வேண்டியிருப்பின் தொடர்ச்சியாக எல்லோருடனும் தொடர்பினை ஏற்படுத்துதல்

9. தினந்தோறும் மேற்கொள்ளும் செயற்பாடுகளை, தினமும் ஒழுங்காக அந்தந்த நேரத்தில் மேற்கொள்ளல்.

10. கருமங்களைப் பிற்போடுவதனைத் தவிர்த்துக்கொள்ளல் முக்கியமானதானல் கடினமானஎந்த ஒரு வேலையையும் பிற்போடுவதனை இயலுமான அளவிற்குத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.

11. தினமும் நித்திரைக்கு செல்வதற்கு முன்பு அன்று உங்கள் நேரத்தினை ஏற்கனவே திட்டமிட்டபடி பயன்படுத்தியுள்ளீர்களா? என்பதனை சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். நேரம் விரையமாக்கப்பட்டிருப்பின் அதற்குரியகாரணங்களைஅறிந்து அதனை நிவர்த்தி செய்ய முயற்சித்தல் வேண்டும்.

ஒருவர் தனது கடமை நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் குறைந்தது ஒரு மணித்தியாலமானது தனது சுய அபிவிருத்திக்காக செலவு செய்தல் வேண்டும். இந் நேரத்தில் அறிவுள்ள நூல்களையும் தனது துறை சார்ந்த நூல்களையும் வாசிப்பதில் ஈடுபடுதல் வேண்டும். மேற்போன்ற முறைகளை பின்பற்றுவதன் மூலம் நேரத்தை சரியாக முகாமை செய்யலாம்

## கூட்டுறவுஇயக்கத்தின் பூரண வெற்றிக்கும் ..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கங்களைப் பூரணமாக நிறைவேற்றப்பூரண ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.

3 அங்கத் வர்கள் அனைவரும் தனியார் கடைகளை ஆதரிக்காமல் தமது சங்கத்தைப் பூரணமாக ஆதரித்து சங்க மூலமாகத் தமது தேவைகள் யாவற்றையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

4 அங்கத்தவர்கள் அனைவரும் தமது உற்பத்திப் பொருட்கள் யாவற்றையும் தமது சங்கத்திற்கு தவறாது விற்பனை செய்ய வேண்டும்.

5, அங்கத்தவர்கள் அனைவரும் தமது சங்கம் கடன் முதலைக் குறைத்து சொந்த முதலில் இயங்க வகை செய்யும் பொருட்டு சங்கத்தில் கூடுதலான பங்குகளைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

6 அங்கத்தவர்கள் அனைவரும் தமது சந்தாப்பணத்தையும் பங்குத் தடவைப் பணத்தையும் தவணை தப்பாது செலுத்த வேண்டும்;

7. அங்கத்தவர்கள் அனைவரும்சங்கத்திலிருந்து தமக்கு வருமதியாகவுள்ள பங்குமீது வட்டிக்கும், ஆதரவுக்கேற்ற தள்ளுபடியான இலாப பாகத்திற்கும் உரிமை கோராமல் சங்கத்தின் மூல தனத்தை அதிகரிக்க அனுமதிக்க வேண்டும்.

8. அங்கத்தவர்கள் அனைவரும் இயலுமான வரை சங்கத்திற்கு நன்கொடைகளையும் உதவு தொகைகளையும் கொடுக்க முன்வரவேண்டும்

9 அங்கத்தவர் அனைவரும் அரசாங்க வங்கிகளையும் தனியார் வங்கிகளையும் ஆதரிக்காமல் தமது சேமிப்பை சங்க வங்கியில் முதலிட வேண்டும்;

10. அங்கத்தவர்கள் அனைவரும் சங்க நிர்வாகத்திலும் செயற்பாட்டிலும் அக்கறையுடையவர்களாகவும் சங்கத்தில் விசுவாசமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்

11. அங்கத்தவர் அனைவரும் சங்க கிளைக்குழு உறுப்பினராகவும் பொதுச்சபை உறுப்பினராகவும் நெறியாளர் குழு உறுப்பினராகவும் தலைவராகவும் தெரிவு செய்யப்படவும் கடமை புரியவும் பெருவிருப்பமுடையவர்களாக இருக்க வேண்டும்

12. அங்கத்தவர் அனைவரும் சங்கம் அழைக்கும் கூட்டங்களுக்கும் செயலமர்வுகளுக்கும் கருத்தரங்குகளுக்கும் தவறாது சமூகம் கொடுத்துத் தமது கூட்டுறவு அறிவைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்.

13. சங்க கிளைக்குழு, பொதுச்சபை நெறியாளர் குழு உறுப்பினர்கள் தவறாது அவற்றின் கூட்டங்களுக்குச் சமூகம் கொடுக்க வேண்டும்.

14. சங்க அங்கத்தவர்கள் அனைவரும் ஜனநாயகமரபுகளுக்கமைய கலந்துரையாடல், தர்க்கித்தல், விட்டுக் கொடுத்தல், சகித்துக்கொள்ளல் போன்ற மார்க்கங்கள் மூலம் சங்கம் சிறந்த தீர்மானங்களை எடுக்க உதவி புரிய வேண்டும்

15. சங்க அங்கத்தவர்கள் அனைவரும் சம்பளம் பெறாமல் சங்கத்திற்குக் கௌரவ சேவை புரிய முன்வர வேண்டும்.

16 சங்க அங்கத்தவர்கள் அனைவரும் சங்கத்தலைமையையும் நிர்வாகத்தையும் மதித்து அவர்களுக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காகவும், ஒழுக்கத்துடனும் ஒழுக வேண்டும்.

17 அங்கத்தவர் அனைவரும் சங்க நிர்வாகம் விடும் தவறுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் திருத்த நடவடிக்கை எடுத்து சங்க நிர்வாகம் ஒழுங்காக நடத்த உதவி செய்யக் கூடிய வகையில் செயற்படவேண்டும்

18. அங்கத்தவர் அனைவரும் சங்கத்தினதும், தமதும் சிக்கனத்தையும் சேமிப்பையும் அபிவிருத்தி செய்யக் கூடிய வகையில் செயற்பட வேண்டும்

19. அங்கத்தவர்கள் அனைவரும் சாதி, இன, மத வேறுபாடுகளை முற்றாக மறந்து சுய உதவி பரஸ்பர உதவி என்ற கூட்டுறவுப் பண்புகளுக்கமைய தமது முன்னேற்றத்திற்காகவும் ஏனைய சங்க அங்கத்தவர்களின் முன்னேற்றத்திக்காகவும் அயராது உழைக்க வேண்டும்.

மேலே கூறப்பட்டவகையில் ஒரு அங்கத்தவன் தனது சங்கத்திற்கு தனது முழுமையான பங்களிப்பை வழங்கும் பொழுது தான் கூட்டுறவுச் சங்கம் பூரண வெற்றியைப் பெற முடியும். உலகில் முதன் முதலாக வெற்றிபெற்ற இங்கிலாந்தில் ரொச்டேல் என்ற கிராமத்தில் 1844ம் ஆண்டு நிறுவப்பட்ட "ரொச்டேல் நுகர்ச்சியாளர் கூட்டுறவுச்சங்கம்" எத்தனையே இடர்களுக்கு மத்தியில் பூரண வெற்றி பெற்றமைக்கு அதனை ஆரம்பித்த "ரொச்டேல் முன்னோடிகள்" என உலக கூட்டுறவாளர்களால்கௌரவிக்கப்படுகின்ற அதன் ஆரம்ப அங்கத்தவர்களான இருபத்தெட்டுக் கம்பளி நெசவுத் தொழிலாளர் போதிய கூட்டுறவு அறிவும் ஆற்றலும் சங்கத்தின் மீது விசுவாசமுள்ளவர்களாக இருந்தமையும் இவர்கள் சங்கத்தின் செயற்பாட்டுக்குழு முழுமையான பங்களிப்பை வழங்கியமையுமே மூல காரணங்களாக அமைந்தன என்பதை இவ்விடத்தில் மனங்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

தற்பொழுது இங்கிலாந்து சுவிடின், டென்மார்க் இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் ஆயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகவும் உலகிற்கு முன்மாதிரியாகவும் இயங்குவதற்கு அந்தச் சங்கங்களின் அங்கத்தவர்கள் போதிய கூட்டுறவு அறிவும் ஆற்றலும், சங்கத்தின் மீது விசுவாசமும் உள்ளவர்களாகவும் சங்க வளர்ச்சிக்கு முழுமையான பங்களிப்பை வழங்குவோராக இருப்பதே மூலகாரணங்களாகும்.

இந்தியா இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளிலும் ருசியா போன்ற பொதுவுடமை நாடுகளிலுமுள்ள கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள் கூட்டுறவு அறிவற்றவர்களாகவும் ஆற்றலற்றவர்களாகவும் சங்கத்தின் மீது விசுவாசமற்றவர்களாகவும், விளங்குவதால் தான் அந்நாடுகளில் உள்ள கூட்டுறவு அமைப்புக்கள் தன்னாதிக்கத்தையும், சுதந்திரத்தையும், நல்லியக்கத்தையும் முற்றாக இழந்து அரசாங்கத்தினதும் அரசாங்க உத்தியோகத்தர்களினதும் கைப்பொம்மைகளாகவும் விளங்குவது மிகமனவருத்தத்திற்குரியதாகும்.

இவற்றை நிவர்த்தி செய்வதற்கு இந்நாட்டுக் கூட்டுறவு நிறுவனங்கள் தமது அங்கத்தவர்களை "முழுமைத்துவம்" பெற்ற அங்கத்தவர்களாகவும் கூட்டுறவு இலட்சிய அங்கத்தவர்களாகவும் ஆக்க காலம் பிந்தாமல் நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக அவசியமாகும்.

# பொது அறிவு - GENERAL KNOWLEDGE

**விநோத உயிரினங்கள்**

- ☆ மிகப் பெரிய வாயுள்ள விலங்கு - நீர் யானை
- ☆ பித்தப்பை இல்லாத முலையூட்டி - எலி
- ☆ நாக்கு இல்லாத ஊர்வன - முதலை
- ☆ கண்களின் மூலம் வியர்வையை வெளியேற்றும் உயிரினம் - முதலை
- ☆ தான் உண்ட எலும்பை ஜீரணிக்கும் ஆற்றலுடைய ஒரேயொரு உயிரினமும் முதலைதான்
- ☆ பறக்கும் முலையூட்டி - வெளவால்
- ☆ நீந்தத் தெரியாத விலங்கு - ஒட்டகம்
- ☆ மண்டையோடும், அலகும் ஒரே எலும்பால் அமையப் பெற்ற பறவை - மரங்கொத்தி
- ☆ பறவை இனங்களில் மிகவும் சிறியது - ரீங்காரப் பறவை இது கியூபாவில் காணப்படுகின்றது
- ☆ பூமி வெப்பமடைவதால் அழிவின் விளிம்பிலுள்ள மிருகங்கள் துருவக் கரடிக்குட்டிகள், அல்கா,

**இலங்கையின் கல்வித்துறை சம்பந்தமானவை**

- ☆ இலவசக் கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு 1945 C. W. W கன்னங்கரா கல்வி அமைச்சராக இருந்த போது அவரால் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனால் அவரை " இலங்கை இலவசக்கல்வியின் தத்தை" எனப் போற்றுகின்றனர்.
- ☆ இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியுடன் இணைந்ததாகக் கொழும்பில் இலங்கைப் பல்கலைக்கழக கல்லூரி 1921 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ☆ இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியையும், கொழும்பு மருத்துவக் கல்லூரியையும் இணைத்து கொழும்பில் இலங்கைப் பல்கலைக்கழகம் 1942 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ☆ இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணை வேந்தராகப் பதவி வகித்த முதலாவது இலங்கையர் - சேர் நிக்கலஸ் அட்டிகல
- ☆ யாழ்ப்பாணப் பல்கலைக்ககழக் கல்லூரி 1972ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது 1974 ஒக்ரோபர் 06 முதல் இப்பல்கலைக்கழகக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப் பட்டது
- ☆ மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி 01 - 08 - 1981 இல் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 01 - 10 - 1986இல் இது கிழக்குப் பல்கலைக் கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டது;
- ☆ இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் நாட்டின் உயர் கல்வித் துறையில் 1980 ஆம் ஆண்டு இலங்கைத் திறந்த பல்கழைக்கழகம் நிறுவப்பட்டது இதன் துணைவேந்தராகக் கலாநிதி காமினி கொரயா கடமை புரிந்து வருகின்றார்?
- ☆ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனும் நிறுவனம் 1978 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. இத்த நிறுவனம் இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களது நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருப்பதுடன், பல்வேறு பீடங்களுக்கும் மாணவர்களைத் தெரிவு செய்து அனுமதியும் வழங்குகின்றது?
- ☆ இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி முதன் முதலில் 1893ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது
- ☆ தேசியக் கல்வி நிறுவகம் (NIE) விசேட பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் 1985ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது மஹரகமவில் உள்ளது.
- ☆ பாடசாலைகளில் மாணவர்களுக்கு இலவச பாடநூல் விநியோகிக்கும்திட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு - 1980
- ☆ இலவச மதிய உணவு முத்திரை விநியோகிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1990இல் முதலில் உணவு இலவச மதிய உணவு வழங்கும் திட்டமாக 1989இல் இது ஆரம்பிக்கப்பட்து இத்திட்டம் 1996இல் நிறுத்தப்பட்டது
- ☆ இலவச பாடசாலை சீருடை பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கும் திட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு - 1993
- ☆ இலங்கையில் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்ட ஆண்டு 1960 இந்த ஆண்டிலேயே தாய்மொழி மூலமாகப் போதிக்கும் பாடசாலைகளும் உருவாகின
- ☆ 1980ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்த வெள்ளை அறிக்கை வெளியாகியது
- ☆ தேசிய கல்வி ஆணைக்குழு 1990ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது
- ☆ இலங்கையில் பள்ளிக்கூட "சிசுக்கோத்து" நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு - 1968
- ☆ 1978இல் உயர்கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது தொழில் நுட்பக் கல்வி உயர்கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது
- ☆ 1987இல் கணனித் தொழில் நுட்ப நிறுவனம் நிறுவப்பட்டது
- ☆ 1987இல் தேசிய பாடசாலைகள் என்ற கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் முழு நிலைப் பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாகஉருப் பெற்றன

தொகுப்பு: வே ம. மாறன்

# சுரண்டலற்ற சமுதாயம் அமைத்திட வாரீர்

ஏழு நிறக் கொடியுடன், எழில் பரப்பும் கூட்டுறவே
ஏன் எங்கள்நாட்டில் நீ வளர மறுக்கின்றாய்
கூடி நின்று உழைத்தல் என்பது உன் பொருளாயின்
நாடி வந்து உழைக்க நம்மவர்கள் மறுக்கிறார்களா?

தத்துவத்தை அறிந்த தகமை உள்ள பெரியவர்கள்
தத்துவத்தை மறந்து தாம் புதுமை செய்ய நினைக்கிறார்கள்
உண்மை அது அல்ல உத்தமர்களே கேள்மின்
உலகம் போற்றும் கூட்டுறவினை உன்னிப்பாய் பாரும்-ஐயா.

சுரண்டலற்ற சமுதாயம் சுதந்திரமாய் நடமாட
வரண்டு போன நம் நாட்டை, வளம் கொளிக்க மாற்றிட
ஏழைகளின் ஏக்கங்களை எதிர் கொண்டு துரத்திட
அறியாமை என்னும் ஆமையை அழித்திடவே வாரீர்.

போட்டி பொருளாதாரமென்றால் நமக்கு என்ன
ஈட்டி வைத்த செல்வமதனை ஏன் முடக்கி வைத்திருப்பான்
பல்கி பெருகும் வாணிபத்தினை நாம் ஏன் பார்த்திருப்பான்
திட்டங்கள் பல தீட்டி தீர்க்கமாய் நடத்திடுவோம்.

உள்ள வளங்களை உன்னிப்பாய் கவனித்து நல்ல - பல
திட்டங்களை நாம் செயல்படுத்த என்ன குறை
ஆளணியும் மெத்தம், ஆலோசனைக்குக் குறைவில்லை
அணி திரண்டு சேர்ந்திட்டால் ஏது இல்லை எமக்கு!

ஆக்கம்: பீற்றர் ராஜன்
பொலிகண்டி.

# நிலவின் குரல்

நானோர்
இதழ்களில்லாத பூ
இரவின் வருகையால்
வானப் பொய்கையில்
மலர்ந்து மிதக்கின்றேன்
நான் மிதக்கும்போது தெறிக்கும்
தேன் துளிகளே இந்த
நட்சத்திரங்கள்!
என்னை நிலா என்கிறது மானுடம்
நீல ஏட்டிலே
இயற்கை எழுதுகின்ற
ஒளிக் கவிதையே நான்!
நீங்கள் என்னைத்
தொலைவிலிருந்து பார்க்கின்றீர்கள்
கவிஞன் மட்டுமே
தொட்டுப் படிக்கிறான்!
அவன்
என்னிடம் சொல்கிறான்
சந்திரப் பெண்ணே
உன் கன்னப் பாதையில்
படிந்திருப்பது கறையல்ல
என் கைவிரல் ரேகையடி என்று...
அவன் காதல் 'கறை' காணாக் காதல்
கற்பக மரத்திலிருந்த
நிலாக்கனி நான்
இரவின் கரங்களால்
பறிக்கப்பட்டு வானத்தட்டில்
வைக்கப்பட்டிருக்கிறேன்!
தாரணி படிக்க வானில் தொங்கும்
தத்துவ நூல் நான்
பூமியிலிருந்து என்னைப் படிப்பதற்காய்
ஏறிவருவோர் என் ஏடுகளைத் திருடி
இறங்குகிறார்கள்.
புரிந்து கொள்ளுங்கள்
குளிர்ந்த குணத்தால் மட்டுமே
மண்ணின் இதயங்களில் நீங்கள்
இரண்டறக் கலக்கலாம்
ஊழி முடியும் வரை
இந்த நிலவுக் கவிமகள்
உங்களுக்காகவே
பாடிக்கொண்டிருப்பாள்!

ஆக்கம்:- சி தயாநிதி
கட்டைவேலி நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்

# வணிகக்கல்வி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

* வட்டி விகிதத்தை நிர்ணயித்தல்
* நிதி கம்பனி செயற்பாடுகளை அடிக்கடி பரிசீலித்தல்
* நிதிக்கம்பனிகளை அதிகளவில் அறிக்கைகள் பேணுமாறு வலியுறுத்தல
* கணக்குகள் பேணும் முறையை எடுத்துக் கூறுதல்
* நிதிக்கம்பனிகளின் பதிவை ரத்து செய்தல
* தேவையாள போது நிதிக்கம்பனி முகாமையைப் பொறுப்பேற்றல் போன்ற வழிகளிலும் கட்டுப்படுத்திக் கொள்கிறது

11 நம்பிக்கை அலகில் (Unit trust) உள்ள அனுகூலங்கள்

* சமூகத்திலுள்ள சகல மட்டத்தினரும் முதலிட வாய்ப்பு கிடைக்றது
* திறமை மிக்க நிதி முகாமையாளர்களால் முதலீடுகள் மேற்கொள்ளபடுவதால் உச்ச பயனை பெற்றுக் கொள்ளலாம்
* அரசிடமிருந்து வரிசலுகைகளை பெறலாம்
* விரும்பிய போது முகாமை கம்பனிக்கு விற்று பணமாக்கலாம்
* பல்வேறு நிறுவனங்களில் முதலீடு செய்யப்படுவதன் மூலம் முதலுக்கான அபாயம் குறைக்கப்படுகிறது

12. வரி சலுகைகள் என்ற வகையில் விலை கூறிய கம்பனி பங்குதாரர்கட்கான நன்மைகள் எவை?

பங்குதார சொத்து மீதான சொத்து வரி நீக்கப்பட்டமை
முத்திரை வரி நீக்கப்பட்டமை
பங்குவிற்பனையால் பெறும் மூலதன லாபம் மீதான வரி விலக்கப்பட்டமை
பிடித்துவைத்தல் வரி நீக்கப்பட்டமை
குறைந்தளவிலான வருமானவரி.

Registered as a News paper at the G. P. O
Sri Lanka Under / No K. V. J. 59 / 87
ஐக்கியதீபம் கார்த்திகை- 2000

# கூட்டுறவுப் பெரியார் அமரர் வி. வீரசிங்கம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு துறைசார் அறிவாளர்கள் தற்காலத்தில் முன்வைக்கும் கருத்துக்களை அன்றாடம் நாம் பார்க்க முடிகிறது. இன்று பலராலும் முன்வைக்கப்படும் இக்காலத்திற்கு வேண்டப்படும் ஆலோசனைகளை 1955ம் ஆண்டிலேயே பாரராளுமன்றத்தில் எடுத்துரைத்த தீர்க்கதரிசி அமரர் வீரசிங்கம் அவர்கள். 15 08-1955ம் ஆண்டு பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் போது '' செயல் ரீதியில் கல்விக் கொள்கைகளை தயாரிப்பதை நான் வரவேற்கின்றேன். பல்கலைக்கழகம் வரை மாணவர்களுக்கு தாய் மொழியில் கல்வி போதிப்பதை மிகவும் விரும்புபவர்களில் நானும் ஒருவன், ஆங்கிலம் கற்பதில் உண்மையில் நாம் வளர்ச்சி காண வேண்டும் செயல் முறைகள் கல்விக்காகபயிற்சிக்கல்லூரிகளையும், தொழில்நுட்பக் கல்லூரிகளையும் உருவாக்க வேண்டும் யாழ்ப்பாணத்திற்கு வெகு விரைவில் தொழில்நுட்பக் கல்லூரி திறக்கப்பட வேண்டும். இதனால் இளைஞர்கள் பயன் அடைய வேண்டும் என்ற தொலை நோக்குள்ள கருத்துக்களை முன்வைத்தார்.

அமரர் வீரசிங்கம் அவர்களின் தலைமைத்துவ ஆற்றல் இம்மாவட்டத்தில் உருவான கூட்டுறவு அமைப்புக்கள் பல பிரதேச, மாவட்ட மட்டத்தில் மட்டுமன்றி தேசிய மட்டம் வரை கூட்டுறவுக்கு ஆற்றிய பணிகள் பட்டியல் இட்டு சொல்ல முடியும் கூட்டுறவுத் துறை எந்தச் சக்தியினதும் கைகளில் அடிமைப்படாது சுதந்திரமான அமைப்பாக மிளிர வேண்டும் என்பதில் ஆர்வமுடையவராக செயல்பட்டார். கூட்டுறவின் வளர்ச்சிக்கு சட்ட திட்டங்களை விட கூட்டுறவாளரின் உண்மையான முயற்சியே வெற்றியளிக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டு நிரூபித்தும் காட்டினார்

யாழ். மாவட்டக் கூட்டுறவாளர்களை மட்டுமன்றி வடகிழக்கு மாகாணத்தை கூட்டுறவுக் கொடியின் கீழ் அரவணைத்து அனைத்து கூட்டுறவாளர்களின் குரலைஒன்று சேர்த்து உரமாக உரத்த குரலில் கூட்டுறவுச் சக்தியை வெளிக்காட்டினார். வடகிழக்கு மட்டத்துடன் நில்லாது தேசிய மட்டத்தில் கூட்டுறவை ஒன்றிணைத்து இலங்கைக்கூட்டுறவுச்சம்மேளனத்தை உருவாக்கி கூட்டுறவுச் சக்தியை பலமாக்கினார்.

அமரர் அவர்கள் கூட்டுறவுக் கொள்கைகளை நன்கு புரிந்தமையால் கூட்டுறவுக் கொள்கைகள் மக்கள் மத்தியில் வேரோடி விருட்சமாக கூட்டுறவுக் கல்வி எத்துணை அவசியம் என்பதை முழுமையாகஏற்றுகொண்டார். இதனால் கூட்டுறவுக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இதன் பயனாகவே இலங்கையில் முதலாவது கூட்டுறவுக் கல்லூரி என்ற பெருமையைப் பெற்ற எமது கூட்டுறவுக் கல்லூரி தோற்றம் பெறவும், ஐக்கிய தீபம் என்ற இப்பத்திரிகை வெளிவரவும் இன்னும் ஆங்கிலத்தில்

என்ற பத்திரிகை வெளிவரவும் முடிந்தது அவர் தனது கூட்டுறவுச் சேவைக்காலத்தில் கூட்டுறவுக் கல்விக்கு அளித்த முக்கியத்துவமே அன்னாரின் கூட்றவுப் பணியின் வெற்றிக்கு அணிசேர்த்தது.

அமரர் அவர்களின் கூட்டுறவுப் பணிகளையும், சமூகப் பணிகளையும் போற்றும் இவ்வேளையில் அவர் காட்டிய வழிமுறைகளைப் பின்பற்றுதல் எத்துணை அவசியம் என்பது புலனாகும்

பெரியார் வீரசிங்கம் அவர்களின் கால கூட்டுறவு வளர்ச்சியை தற்கால கூட்டுறவு நடவடிக்கைகளுடன் ஒப்பு நோக்குகையில், தற்போது கூட்டுறவுச் செயல்பாட்டில் நாம் அடைந்துள்ள தளர்வு நிலைக்கு பல காரணிகள் சம்பந்தப்பட்டாலும் அமரர் வீரசிங்கம் அவர்கள் காலத்தில் கூட்டுறவாளர்களிடையே காணப்பட்ட கூட்டுறவுத் தன்மை, வலு, ஒற்றுமை போன்ற அம்சங்கள் இன்று இல்லாது இருப்பது வெளிப்படையே அமரன் சிரார்த்த தினத்தை நினைவு கூரும் இவ்வேளை அவர் காட்டிய கூட்டுறவு தலைமைத்துவத்தை பின்பற்றி இம்மாவட்டத்தில் சிறந்த ஒரு துறையாக கூட்டுறவுத் துறையை மேம்படுத்த மனங்கொள்வோமாக.

திரு. சு. சிவசுப்பிரமணியம்
மாவட்டச் செயலாளர்
யாழ். மா. கூ. சபை

## பொருட்காட்சியும் மலிவு விற்பனையும்

கட்டைவேலி - நெல்லியடி பலநோ கூட்டுறவுச்சங்க மகளிர் குழுவும், யாழ். மாவட்டக் கூட்டுறவு சபையும் இணைந்து நடாத்திய அடிப்படை மனையியற் பயிற்சியின் முடிவில் நடாத்தப்பட்ட பொருட்காட்சியும் மலிவு விற்பனையும் அண்மையில் நடைபெற்றது.

மகளிர் குழுத் தலைவி திருமதி வ. பத்தினிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் போருட் நிறுவன உதவித்திட்ட இணைப்பாளர் திருமதி சிறிதரன் தேவிகாராணி முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருத்தினர்களாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி. சிவநாதன், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி சுகுமாரன், சாவகச்சேரி, கொடிகாமம், நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் முறையே, திரு. செ. சுப்பிரமணியம், திரு. பொ. கனகராசா, திரு. கிருஷ்ணராசா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. பெ கனகசபாபதி, செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம், மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வே. செல்வரத்தினம், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு. த. செல்வஜோதி ஆகியோரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள்.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு த. சிதம்பரப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார்

யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் 1ம் மாடியில் இயங்கும் யாழ். மா கூ. சபையினரால் 2000ம் ஆண்டு கார்த்திகை மாதம் வெளியிடப்பட்டது